ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு


| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020 மே 18 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 ஏப்பிறல்

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**24.2**

2020 மாச்சுடன் ஒப்பிடுகையில் 5.8 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

**இலங்கையின் தயாரிப்புத் துறையில் கொவிட் - 19 இனால் தூண்டப்பட்ட வீழ்ச்சியானது** தயாரித்தல் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் அளவீட்டின் தொடக்க காலத்திலிருந்து நோக்குகையில் மிகக் குறைந்த மட்டத்தினை அடைந்து, முன்னைய மாதத்திலிருந்து 5.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றுடன் 24.2 சுட்டெண் பெறுமதியில் பதிவாகிய மேலும் சுருக்கத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு **ஏப்பிறல் காலப்பகுதியில் தீவிரமடைந்தது.** சுட்டெண்ணின் இவ்வீழ்ச்சியானது ஒருபோதும் இல்லாத வீதங்களில் வீழ்ச்சியடைந்த புதிய கட்டளைகள், உற்பத்தி மற்றும் தொழில்நிலை மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வைரஸ் பரவலினை மட்டுப்படுத்துவதற்கு நாடு முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட ஊரடங்கு மூலம் அநேகமாக அனைத்துத் தயாரிப்பு நிறுவனங்களும் 2020 ஏப்பிறல் மாத காலப்பகுதியின் போது ஒன்றில் மூடப்பட்டிருந்தன அல்லது அதன் வழமையான கொள்ளளவின் ஒரு பகுதி தொழிற்படுத்தப்பட்டது. அதற்கமைய புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்கள் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மிகவும் கீழ் காணப்பட்டன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கொவிட் - 19இன் துரிதமான பரவலின் காரணமாக அந்நாடுகளின் கொள்வனவாளர்களிடமிருந்து தமது வழமையான உற்பத்திகளுக்கு தாம் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என புடவை மற்றும் அணியும் ஆடைத் துறைகளிலுள்ள பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். மேலும், தொழில்நிலையில் வீழ்ச்சிக்கு சில அமைய/ தற்காலிக ஊழியர்கள் நிறுத்தப்பட்டமை முக்கிய காரணமாக அமைந்தது. உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளின் வீழ்ச்சிக்கேற்ப கொள்வனவுகளின் இருப்பும் குறைவடைந்தது.

ஏப்பிறல் மாத காலப்பகுதியில் நிரம்பலாளர்களின் வழங்கல் நேரமானது நீட்சியடைந்து ஒட்டுமொத்த சுட்டெண்ணின் கணிசமான அளவிலான வீழ்ச்சிக்கு செல்வாக்குச்செலுத்தியது. நிரம்பலர் வழங்கல் நேரம் நீட்சியடைதலானது தயாரித்தல் நடவடிக்கையின் விரிவுபடுத்தலுடன் கூடிய பொருட்களுக்கான உயர்வான கேள்வியினை எடுத்துக்காட்டுகின்ற போதிலும் இச்சந்தர்ப்பத்தில் கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் இணைந்த கப்பலேற்றல்கள் மற்றும் உள்நாட்டு ஏற்பாட்டுச் சேவைகளில் ஏற்பட்ட தாமங்கள் நீண்ட முதன்மை நேரங்களை தோற்றுவிக்கப்பட்டிருந்தன.

| மாறி | மாச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **30.0** | **24.2** | **-** | **சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 18.7 | 11.1 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில் |
| உற்பத்தி | 5.2 | 3.5 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 44.8 | 29.9 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 12.7 | 9.7 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 85.8 | 86.8 | + | விரிவடைகின்றது உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயானது உலகளாவிய வழங்கல் சங்கிலிக்கும் அதேபோன்று கேள்விக்கும் இடையூறு ஏற்படுத்துமென தயாரிப்பாளர்கள் எச்சரிக்கையாக இருந்தனர். எனினும், அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்ப்புக்கள், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன. ஆயினும் நடுநிலையான அடிப்படை அளவிற்கு கீழ் காணப்படுகின்றன.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 மாச்சிலிருந்து 7.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2020 ஏப்பிறலில் 39.8 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

கொவிட் - 19இன் மோசமான தாக்கத்தின் மூலம் 2020 ஏப்பிறலில் இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ருஷியா, ஐரோப்பிய வலயம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு சுருக்கமடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], மே 17, 2020 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோய் பரவலினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நீண்ட முடக்குதல் வழிமுறைகளின் காரணமாக, வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் தொழில்நிலை துணைச் சுட்டெண்கள் உயர்வான வீதத்தில் வீழ்ச்சியடைந்தமையினால் **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2020 மாச்சின் 32.0 இலிருந்து 2020 ஏப்பிறலில் 29.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட ஒருபோதுமில்லாத குறைவான மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது**.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**29.8**

**2020 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

வர்த்தக நடவடிக்கைகள் துணைச் சுட்டெண்ணானது பணிகள் நடவடிக்கைகள் மீதான கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயின் மிகையான தாக்கத்தினை எடுத்துக்காட்டி, அளவீட்டின் தொடக்க காலத்திலிருந்து நோக்குகையில் ஆகக்குறைந்த பெறுமதியான 8.6 சுட்டெண் புள்ளிகளுக்கு சடுதியாக வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துத் துணைத் துறை வர்த்தக நடவடிக்கைகள், பன்னாட்டு வர்த்தகத்திற்கான கட்டுப்பாடுகள் மற்றும் இடையூறுகளின் காரணமாக நீண்டகால உள்நாட்டு பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சரக்குக் கையாளுதலில் மெதுவடைதல் என்பவற்றை தொடர்ந்து மேலும் வீழ்ச்சியடைந்தது. இதற்குப் புறம்பாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறையின் வர்த்தக நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைந்தன இதற்கு மாதகாலப்பகுதியின் போது காணப்பட்ட உள்நாட்டு பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பூச்சிய பன்னாட்டு சுற்றுலாப் பயண வருகைகள் காரணமாக அமைந்தன. அத்தியாவசியப் பொருட்களுக்கு நிலவுகின்ற கேள்விக்கு மத்தியில், மொத்த மற்றும் சில்லறை வர்த்தக வியாபார நடவடிக்கைகள் துணைத் துறையானது விநியோகத் தொழிற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் ஏற்பட்ட தடங்கல்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான கேள்வியில் வீழ்ச்சியுடன் இணைந்த வியாபாரத் தொழிற்பாடுகள் முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டமை என்பன காரணமாக வீழ்ச்சியடைந்தது.

புதிய ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட்டமைக்கு மத்தியில் ஒப்பந்த மற்றும் அமைய ஊழியர்களின் சேவைகள் நிறுத்தப்பட்டமை காரணமாக பணிகள் துறையின் தொழில்நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.


நடவடிக்கைக்கான புதிய வர்த்தகம் மற்றும் எதிர்பார்க்கைகள் 2020 ஏப்பிறலில் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், சாதாரண வாழ்க்கையினையும் மற்றும் நிறுவனங்களை இயல்புநிலைக்கு மீண்டும் கொண்டுவருவதனை நோக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் எதிர்கால வர்த்தக நடவடிக்கைகள் பற்றி நிதியியல், சுகாதாரம் மற்றும் தொழில்சார் பணிகள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் போன்ற அத்துடன் போக்குவரத்துத் துணைத் துறைகள் போன்றவற்றிலுள்ள பதிலிறுப்பாளர்கள் ஒப்பீட்டளவில் சாதகமான மனப்பாண்மையுடன் காணப்படுகின்றனர்.

| மாறி | மாச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **32.0** | **29.8** | **-** | **சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில்** |
| **<u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u>** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 25.7 | 26.8 | + | சுருக்கமடைகின்றது மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 17.1 | 8.9 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 34.8 | 33.7 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில |
| நிலுவையிலுள்ள பணிகள் | 65.4 | 60.8 | - | அதிகரிக்கின்றது மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 16.9 | 18.9 | + | சுருக்கமடைகின்றது மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2020 ஏப்பிறலில் நிலுவையிலுள்ள பணிகள் ஒட்டுமொத்த சுட்டெண்ணுக்கு பாரியளவில் துணையளித்து தொடர்நதும் அதிகரித்தது. நிலுவையிலுள்ள பணிகளில் அதிகரிப்பானது வழமையாக ஏற்கனவேயுள்ள தொழிற்பாட்டு இயலளவினுள் வர்த்தக நடவடிக்கைகளில் விரிவுபடுத்தலை நிறைவேற்ற முடியாமையினை எடுத்துக்காட்டுகின்ற போதிலும் 2020 ஏப்பிறலில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அத்தியாவசியமற்ற சேவைகள் மீது விதிக்கப்பட்ட நீண்ட கட்டுப்பாடுகள் முதன்மைக் காரணமாக அமைந்தன.

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயின் காரணமாக உலகளாவிய பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தொடர்ந்தும் மூன்றாவது மாதமாகவும் நடுநிலை 50.0 மட்டத்திற்குக் கீழ் காணப்படுவதனைப் பதிவுசெய்து 2020 மாச்சின் திருத்தப்பட்ட 36.8 இலிருந்து 2020 ஏப்பிறலில் 24.0 கொண்ட ஒருபோதுமில்லாத குறைந்த மட்டத்திற்கு சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஏப்பிறலில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் சீர்குலைந்திருந்தமையினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], மே 17, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.
கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.
**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**
தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள்
மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.